<u>சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி.எண். 124/2022

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | செந்தமிழ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, வாகன பதிவுச்சான்று ம.சா.ஆ.2, வாகன காப்பீட்டு சான்று ம.சா.ஆ.3, அருண் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.4, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.5, ஜெயபிரகாஷ் இறப்பு அறிக்கை ம.சா.ஆ.6, ஜெயபிரகாஷ் இறப்பு சான்று ம.சா.ஆ.7, பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.8, மனுதாரர் ஆதார் அட்டை ம.சா.ஆ.9. (ம.சா.ஆ.9 அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

முதல் விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.